# த மி ழ் ர வ் க ள்

ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளை

***

சுதேச மித்திரன் வருஷ
அநுபந்தம்

*

1918

பக்கம் 22.

ஜகோ/.

# தமிழ் நூல்கள்

தமிழ் என்பது நாவிற்கும் செவிக்கும் உள்ளத்திற்கும் இனிமையைப் பயக்கும் ஒரு பாஷை. அது நாள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்படும். இயற்றமிழாவது உலக வழக்கில் இயலும் தமிழ்ச் செய்யுளும் வசனமுமாம். இசைத் தமிழாவது பண், தாளம் முதலிய வற்றோடு கூடி நடக்கும் தமிழ்ச் செய்யுளாம். நாடகத் தமிழாவது நடித்தலொடு கூடி நடக்கும் அவ்விருவகைத் தமிழுமாம். நூல் என்பது பஞ்சின் நூல் போல நேரிதான ஒழுக்கத்தைக் காட்டும் ஒரு கருவி. அதுதான் எண்ணூல் எனவும் எழுத்து நூல் எனவும் இருவகைப்படும். எண்ணூலாவது கணித நூலாம். எழுத்து நூலாவது இலக்கிய இலக்கணங்களாம். கணிதம், கணக்கு, எண் என்பன ஒரே பொருளைக் குறிச் சொற்கள். கணித நூல் என்சுவடி, குழிபெருக்கம் முதலிய கணக்கு நூல்களாம். இலக்கியம், இலக்ஷியம், இலக்கு, குறி என்பன ஒரே பொருளைக் குறிக்குஞ் சொற்கள். ஈண்டு, இலக்கியமென்பது இலக்ஷியத்தை யுடைய நூல்களைக் குறித்து நிற்பது. நூல்களின் இலக்ஷியம் நான்காகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன இந்நான்கில் ஒன்றையேனும் ஒன்றிற்கு மேற்பட்டவற்றையேனும் இலக்ஷியமாகக் கொண்டு கூறப்படுவன வெல்லாம் இலக்கியமாகும். இந்நான்கில் ஒன்றையேனும் இலக்ஷியமாகக் கொள்ளாது வெறுங்காலப் போக்கு முதலியவற்றின் நிமித்தமாகக் கூறப்படுவனவெல்லாம் இலக்கியமாகா; நூலுமாகா; சிற்பம், ஜோதிடம் முதலியவற்றைக் கூறுவன இலக்கியமாகாவோவெனின், அவை அறமும் பொருளும் இன்பமும் செய்தற்குத் துணையாமாதலால்

அவையும் இலக்கியமாம். இலக்கணம் இலகணம் இயல்பு, தன்மை என்பன ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள். ஈண்டு இலக்கணமென்பது இலக்ஷணத்தைக்கூறும் நூல்களைக் குறித்து நிற்றது. இலக்ஷணமாவது அறம் பொருள், இன்பம் வீடு என்னும் இலக்ஷியங்களையுடைய நூல்களாகிய இலக்கியத்தின் இயல்பாம். எழுத்து, சொல் முதலியவற்றைக் கூறுவன் இலக்கணமாகாவோ வெனின் அவை இலக்கியத்தின் பொருள்களை நன்கு அறிதற்குத் துணையாமாகலால் அவையும் இலக்கணமாம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருள்கள் நான்கில், இன்பம் அகத்தின்கண் நிகழ்வதால் அதனை அகப் பொருளென்றும், மற்றை மூன்றும் புறத்தின்கண் நிகழ்வதால் அவற்றைப் புறப் பொருளென்றும் பிரித்து, அகப்பொருளைக் கூறும் இலக்கிய இலக்கணங்களை அகப்பொருளிலக்கிய விலக்கணமெனவும், புறப் பொருளைக் கூறும் இலக்கிய இலக்கணங்களைப் புறப்பொருளிலக்கிய விலக்கணமெனவும், தமிழாசிரியர் கூறுவர். அவ்விலக்கிய விலக்கணங்கள் எண்ணிறந்தன. இவற்றுள் ஏனைய இறந்தனவெல்லாம் இராஜாங்க மாறுதல் முதலியவற்றால் இறந்தொழிந்தன. சிலவே அடங்குவனவே எஞ்சி நிற்றன. இவ்வெஞ்சியவற்றுள்ளும், பாவாய்ப் பட்டன பல; சொல்லுக்கிரையாயின சில; ஒளித்து கிடப்பன ஒரு சில; வெளிப்பட்டன வேறு சில; அச்சாயின அவற்றுட் சில. இத்தகைப் பெருமையும் சீர்மையும் வாய்ந்த தமிழ் இலக்கிய இலக்கணங்களுள் எழில்மிக்க சிலவற்றை ஈண்டு எடுத்துக் கூறுகின்றேன்.

## இலக்கியம்

அரிச்சுவடி:- இது தமிழ் எழுத்துக்களின் வரி வடிவத்தைக்

இதில் உயிரெழுத்துப் பன்னிரண்டும், ஆய்தம் ஒன்றும், மெய்யெழுத்துப் பதினெட்டும், உயிர் மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறும் எழுதப்பட்டுள்ளன. இதைத் தமிழ் நெடுங்கணக்கென்றும் கூறுவர். இஃது அச்சிடப் பட்டுள்ளது.

ஆத்திசூடி:- இஃது ஔவையார் என்ற ஓர் அம்மையார் அருளிச் செய்தது; அரிச்சுவடியிலுள்ள எழுத்து வரிசைப்படி உயிரெழுத்துக்களில் ஒவ்வொன்றையும் முதலெழுத்தாகவும், அகரம் ஏறிய மெய்யெழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரும் ஒவ்வொன்றையும் முதலெழுத்தாகவும் மொழிக்கு முதலில் வராத ஒவ்வொன்றையும் ஆய்தத்தையும் இரண்டாம் எழுத்தாகவும், மற்றை உயிர் மெய்யெழுத்துக் களில் மொழிக்கு முதலில் வரும் ஒவ்வொன்றையும் முதல் எழுத்தாகவும் கொண்ட சீரோடு தொடங்கி இரண்டு சீர்களால் முடியும் சூத்திரங்களால் அருமையான ஒழுக்கங் களையும் நீதிகளையும் போதிப்பது; "ஆத்திசூடி" என்ற தொடரும் காப்புச் செய்யுளையும், "அறஞ் செய விரும்பு" என்பது முதல் "வைகறைத் துயிலெழு" என்பது இறுதியாக வுள்ள நூற்று நான்கு சூத்திரங்களையும் கொண்டது. இச் சூத்திரங்களிற் பெரும்பாலன யாவரும் எளிதில் உணரத் தக்க செந்தமிழ் நடையில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு வசந்தராயர் முதலிய சிலர் உரை செய்திருக்கின்றனர். அவ்வுரைகளில் ஒன்றுடன் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

கொன்றைவேந்தன்:- இதுவும் அவ்வம்மையார் அருளிச் செய்தது; அரிச்சுவடியிலுள்ள எழுத்து வரிசைப்படி மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துக்களையும் பெரும்

பான்மை மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய்யெழுத்துக்களையும், முதலெழுத்தாகக் கொண்ட சீரோடு தொடங்கிய நான்கு சீர்களால் முடியும் சூத்திரங்களால் ஒழுக்கங்களையும் நீதிகளையும் போதிப்பது. "கொன்றைவேந்தன்" என்ற தொடக்கம் காப்புச் செய்யுளையும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது முதல் "வையந்தோறும் தெய்வம் தொழு" என்பது இறுதியாகவுள்ள தொண்ணூற்றேழு சூத்திரங்களையும் கொண்டது. இச்சூத்திரங்களிற் பெரும்பாலன யாவரும் எளிதுணரத் தக்க செந்தமிழ் நடையில் அமைக்கப் பட்டுள்ளன. இதற்கும் வசந்தராயர் முதலிய சிலர் உரை இயற்றியிருக்கின்றனர். இவ்வுரைகளில் ஒன்றுடன் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

<u>வெற்றி வேற்கை</u>:- இஃது அதிவீரராம பாண்டியன் இயற்றியது. வெற்றி வேற்கை என்ற தொடக்கம் பாயிரச் செய்யுளையும் "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்பது முதல், "வாழிய நலனே வாழிய நலனே" என்பது இறுதியாகவுள்ள எண்பத்து நான்கு செய்யுட்களையும் கொண்டு ஒழுக்கங்களையும் நீதிகளையும் அறிவிப்பது. இந்நூலை நறுந்தொகை என்றும் கூறுவர். இஃது ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>வாக்குண்டாம்</u>: இதுவும் மேற்கூறிய ஒளவையார் அருளிச் செய்தது. வாக்குண்டாம் என்ற தொடக்கம் காப்புச் செய்யுள் தவிர முப்பது இனிய வெண்பாக்களால் ஒழுக்கங்களையும் நீதிகளையும் உண்மைகளையும் மிகப் பொருத்தமான உவமானங்களோடு அறிவிப்பது. இந்நூலை மூதுரை என்றும் கூறுவர். இது பழைய உரை ஒன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>நல்வழி</u>: இஃது ஔவையார் என்ற மற்றோர் அம்மையாரால் இயற்றப்பட்டது. பாலும் தெளிதேனும் என்னும் காப்புச் செய்யுள் தவிர நாற்பது இனிய வெண்பாக்களைக் கொண்டு பல நல்லொழுக்கங்களையும் நீதிகளையும் பொருத்தமான உவமானங்களோடு உணர்த்துவது. இஃது ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

முதுமொழிக்காஞ்சி: இந்நூல் முதற்கொண்டு கூறப்படும் பதினெட்டு நூல்களும் பதினெண் கீழ்க் கணக்கு என்னும் தொகை நூலுள் அடங்கின. இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார். இஃது ஒவ்வொன்றுக்கும் பப்பத்து சூத்திரங்களைக் கொண்ட சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப் பத்து, அல்பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப்பத்து என்று பகுக்கப்பட்டு பல நீதிகளையும் உண்மைகளையும் உணர்த்துவது. ஒவ்வொரு பத்திலும் முதலிலும் "ஆர் கலியுலகத்து மக்கட்கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" என்பது முதற் செய்யுளாகக் கூறப்படும். மற்றவையெல்லாம் நான்கு சீர்களைக் கொண்ட ஓர் அடிச் சூத்திரங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இஃது இக்காலவுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இனியவை நாற்பது: இது மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் இயற்றியது. காப்பு வெண்பா. தவிர நாற்பது அழகிய வெண்பாக்களைக் கொண்டு இன்பத்தைத்தரும் நூற்றிருபத்தேழு விடயங்களை உணர்த்துவது. பழையவுரை யொன்றுடன் அச்சிடப் பட்டுள்ளது.

இன்னா நாற்பது: இது கபிலர் அருளிச் செய்தது. இதனையும் "இனியவை நாற்பது" இயற்றிய பூதஞ் சேந்தனாரே இயற்றினரென்று சிலர் கூறுவர். அது தவறு. இது காப்பு வெண்பா தவிர நாற்பது அழகிய வெண்பாக் களைக் கொண்டு துன்பத்தைத் தரும் பல தீய விடயங்களை உணர்த்துவது; இக்காலத்தாரொருவர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

கார் நாற்பது: இதன் ஆசிரியர் மதுரைக் கண்ணங் கூத்தனார். இதுவும் காப்பு வெண்பா தவிர நாற்பது வெண்பாக்களையுடையது. கார் காலத்திற்குள் திரும்பி வருவதாகச் சொல்ல-தலைவன் வாக்களித்துச் சென்ற தலைவன் அக்காலம் வராமை கண்டு தலைவி பிரிவாற்றாமல் வருந்துவதைக் கூறுவது; பழையவுரை ஒன்றுடன் அச்சிடப் பட்டுள்ளது.

களவழி நாற்பது:- இது பொய்கையார் என்ற ஒரு புலவர் இயற்றியது. காப்பு வெண்பா தவிர நாற்பது வெண்பாக்களையுடையது; சேரன் கணைக்காலி ரும்பொறையைச் சோழன் செங்கணான் அமரில் வென்று சிறைப்படுத்திய போது சேரன் கணைக்காலிரும் பொறையைச் சிறைமீட்கும் பொருட்டுச் சோழனுடைய போர்க்களத்தைச் சிறப்பித்துப் பாடியது; புதியவுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இன்னிலை:- இது பொய்கை யாழ்வார் அருளிச் செய்தது. அறப்பால், பொருட்பால், இன்பப் பால், வீட்டுப்பால் என்னும் நான்கு பகுதிகளாகப் பகுக்கப் பட்டு, நாற்பத்தைந்து வெண்பாக்களால் அறம் முதலிய நான்கு பொருள்களையும் நன்கு உணர்த்துவது; இக்கால வுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐந்திணையைம்பது:- இது மாறன் பொறையனார் இயற்றியது; பாயிர வெண்பா தவிர ஐம்பது வெண்பாக்களை உடையது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அகத்திணை யைந்தில் ஒவ்வொன்றையும் பப்பத்து வெண்பாக்களால் இனிது விளக்குவது; பழையவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐந்திணையெழுபது:- இது மூவாதியார் இயற்றியது; மேற் கூறிய அகவொழுக்கம் ஐந்தில் ஒவ்வொன்றையும் பதினான்கு பதினான்கு வெண்பாக்களால் நன்கு விளக்குவது; பழையவுரை யொன்றையுடையது; ஏட்டுப் பிரதியில் இருக்கின்றது.

திணைமொழியைம்பது:- இது கண்ணன் சேந்தனார் இயற்றியது; அகத்திணை ஐந்தில் ஒவ்வொன்றையும் பப்பத்து வெண்பாக்களால் இனிது விளக்குவது; பழைய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திணைமாலை நூற்றைம்பது:- இது கணிமேதாவியார் இயற்றியது; அகத்திணை ஒவ்வொன்றையும் முப்பது முப்பது வெண்பாக்களால் நன்கு விளக்குவது, பழையவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திரிகடுகம்: இது நல்லாதனார் இயற்றியது; காப்பு வெண்பா தவிர ஒரு நூறு வெண்பாக்களை யுடையது; ஒவ்வொரு வெண்பாவிலும் மூன்று விஷயங்களைக் கூறுவது; புதிய வுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

நான்மணிக்கடிகை: இது விளம்பி நாகனார் இயற்றியது; காப்பு வெண்பா தவிர நூற்று மூன்று வெண்பாக்களை யுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு விஷயங்களைக் கூறுவது; புதியவுரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிறுபஞ்சமூலம்: இது காரியாசான் இயற்றியது; சிறப்புப் பாயிர வெண்பா, கடவுள் வாழ்த்து வெண்பா தவிர நூற்று மூன்று வெண்பாக்களை யுடையது; ஒவ்வொரு வெண்பாவிலும் ஐந்து விஷயங்களைக் கூறுவது; இக்காலத்து உரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஏலாதி:- இதனை இயற்றியவர் கணிமேதையார்; சிறப்புப் பாயிர வெண்பா, கடவுள் வணக்க வெண்பா தவிர எண்பது வெண்பாக்களை யுடையது; ஒவ்வொரு வெண்பாவிலும் அவ்வாறு விடயங்களைக் கூறுவது; இக் காலத்து உரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஆசாரக்கோவை:- இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார். இது தற்சிறப்புப் பாயிர வெண்பாவொடு நூற்றொரு வெண்பாக்களை யுடையது. பெரும்பாலும் இல்வாழ்வாரது ஒழுக்கங்களைக் கூறுவது; வடநூலொன் றைத் தழுவி இயற்றப்பெற்றது; பழையவுரையொடு புதியவுரையும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

நாலடி: இது தமிழ் முனிவர் பலரால் பாடப்பட்ட நானூறு வெண்பாக்களையும் கடவுள் வணக்க வெண்பாவை யுமுடையது; ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்து வெண்பா வீதம் நாற்பது அதிகாரங்களாக்கிப் பதின்மூன்று அதிகாரங்களை அறத்துப்பாலாகவும், இருபத்து நான்கு அதிகாரங்களைப் பொருட்பாலாகவும், மூன்று அதிகாரங் களைப் பொருட்பாலாகவும், மூன்று அதிகாரங்களைக் காமத்துப்பாலாகவும் பதுமனாரால் வகுக்கப்பட்டது; திருவள்ளுவர் திருக்குறட்பாக்களிலும் மிக இனிமையான சில பாக்களைக் கொண்டது; அழகிய உவமானங்களோடு நாற்பொருளையும் மிகத் தெளிவாகக் கூறுவது; பலரால் உரையெழுதப்பெற்றது; ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பழமொழி:- இதனை இயற்றியவர் முன்றுறையரையனார். தற்சிறப்புப்பாயிர வெண்பா தவிர நானூறு வெண்பாக் களையுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து அருமையான பல நீதிகளை எடுத்துக்

கூறுவது; பொருட் சிறப்பில் ஒப்புயர்வற்றதென யாவராலும் போற்றப்படும் திருவள்ளுவர் திருக்குறளுக்கு இரண்டாவதாக நிற்குந் தகுதியுடையது; பழையவுரையொடு புதியவுரையும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

முப்பால்:- இது திருக்குறள் முதலிய பல பெயர்களால் வழங்கப்படுவது; பொய்யாமொழிப் புலவரென்று வழங்கும் திருவள்ளுவர் அருளிச் செய்தது; தமிழ் மறைகளில் ஒன்றாயது; அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்துக் குறள் (இரண்டடி) வெண்பாக்களையுடையது. நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களால் அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் மிகத் தெளிவாக உணர்த்தும்; ஒப்புயர்வற்றதொரு சிறந்தநூல்; இந்திய ஐரோப்பிய பாஷைகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டது. புகழ்பெற்ற உரையாசிரியர் பதின்மரால் உரையெழுதப்பெற்றது; முப்பாலும் பரிமேலழகருரை யொடும், அறத்துப்பால் மணக்குடவருரையொடும் அச்சிடப்பட்டுள்ளது.

அறநெறிச்சாரம்: இது முனைப்பாடியார் இயற்றியது; தெய்வ வணக்கம் முதலியவற்றின் வெண்பா நான்கு தவிர, இருநூற்றிருபது அழகிய வெண்பாக்களையுடையது; பல ஒழுக்கங்களையும் நீதிகளையும் தக்க உவமானங்களுடன் நன்கு விளக்குவது; பழைய உரை ஒன்று உண்டெனக் கூறப்படுவது; மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

<u>திருமுருகாற்றுப்படை</u>: இது முதற் கூறப்படும் பத்து நூல்களும் பத்துப்பாட்டு என்னும் தொகை நூலுள் அடங்குவன. இதனை இயற்றியவர் நக்கீரனார். இது முந்நூற்றுப் பதினேழு அடிகளையுடைய அகவற்பா; வீடுபேறு பெற்றான் ஒருவன் அப்பேற்றை அடைய விரும்புவான் ஒருவனை முருகக் கடவுள்பால் வழிப்படுத்தியதாக விஷயத் தைக் கொண்டு அக்கடவுள் திருப்பரங்குன்றம் முதலிய அறுபடை வீடுகளிலும் எழுந்தருளியிருத்தலைப் பாராட்டிக் கூறுவது; இதுவும் பத்துப் பாட்டைச் சேர்ந்த மற்ற ஒன்பது நூல்களும் நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப் பட்டுள்ளன.

<u>பொருநராற்றுப்படை</u>:- இது முடத்தாமக் கண்ணியார் பாடியது; இருநூற்று நாற்பத்தெட்டு அடிகளையுடைய அகவற்பா; பரிசில் பெறக்கருதிய போர்க்களம் பாடுவோன் ஒருவனை, பரிசிற் பெற்றான் ஒருவன் சோழன் கரிகாற் பெருவளத்தானிடத்தே வழிப்படுத்தலை விஷய மாகக் கொண்டது; அக்கரிகாற் பெருவளத்தானது நாடு, நீதி, கொடை, வீரம் முதலியவற்றை அழகாகக் கூறுவது.

<u>சிறுபாணாற்றுப்படை</u>:- இது நல்லூர் நத்தனார் பாடியது. இருநூற்று பத்தொன்பது அடிகளையுடைய அகவற்பா; பரிசில் பெறக்கருதிய பாணனொருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் எறமா நாட்டு நல்லியக் கோடனிடத்தே வழிப் படுத்தலை விஷயமாகக் கொண்டது; அந்நல்லியக் கோடனது நகர்களாகிய வேலூர் முதலியவற்றின் இயல்பையும்; அவனது அரண்மனையின் சிறப்பு முதலியவற்றையும், தமிழ் நாட்டு மூவேந்தருடைய இராஜதானிகளாகிய வஞ்சி, உறந்தை, மதுரை என்னும் நகர்களின் இயல்பையும், பேகன் முதலிய

கடை ஏழு வள்ளல்கள் இன்ன இன்ன கொடையாற் புகழ் பெற்றனர் என்பதையும் கூறுவது.

<u>பெரும்பாணாற்றுப்படை</u>:- இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது; ஐந்நூறு அடிகளையுடைய அகவற்பா; பரிசில் பெறக் கருதிய பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் காஞ்சி நகரத்தை ஆண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்து வழிப்படுத்தலை விஷயமாகக் கொண்டது. அவ்விளந்திரையனது நாட்டிலுள்ள குறிஞ்சி முதலிய ஐந்நிலங்களின் இயல்புகளையும், அவற்றில் வாழ்வாரது தொழில் முதலியவற்றையும், அவனது வள்ளன்மை முதலியவற்றையும் கூறுவது.

<u>முல்லைப்பாட்டு</u>:- இது காவிரிப்பூம்பட்டினத்து நப்பூதனார் பாடியது; ஒரு நூற்று மூன்று அடிகளையுடைய அகவற்பா; தலைவனது பிரிவை ஆற்றியிருந்த தலைவியிடத்து அவன் வந்ததைக் கண்டு தோழி முதலியோர் கூறுதலை விஷயமாகக் கொண்டது; தனித்திருக்கும் தலைவியின் இயல்பு, கார்காலத்தின் தன்மை, தலைவனது வல்லமை முதலியவற்றைக் கூறுவது.

மதுரைக் காஞ்சி:- இது மாங்குடி மருதனார் பாடியது; எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளையுடைய அகவற்பா; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வீடுபேறு அடையும் பொருட்டு உலக நிலையாமையை அவனுக்குச் செவியறிவுறுத்தலை விஷயமாகக் கொண்டது; அவனது முன்னோர் பெருமை, அவனது வீரம், அவனது ஐந்நில வளம், மதுரையின் அழகு முதலியவற்றைக் கூறுவது.

<u>நெடுநல்வாடை</u>:- இது நக்கீரர் பாடியது. இது-நக்கீரர்-பாடிய நூற்றெண்பத்தெட்டு அடிகளையுடைய அகவற்பா; போருக்குச் சென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் தலைவிக்கு அவன் பகையை வென்று விரைவில் வருவானெனவென்று கொற்றவை (துர்கை)யை வழிபடுவாள் கூறுதலைவிடயமாகக் கொண்டது; கார்காலம் கூதிர்காலம் முதலியவற்றின் இயல்புகளையும், தனித்திருக்கும் தலைவி, பாடிவீட்டிலிருக்கும் தலைவன், முதலியோரின் இயல்புகளையும் கூறுவது.

<u>குறிஞ்சிப்பாட்டு</u>: இது கபிலர் அருளிச் செய்தது. இருநூற்றுப் பத்தொரு அடிகளையுடையது அகவற்பா; தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி கூறுதலை விடயமாகக் கொண்டது; மலைவளம், மலர்வகை, இல்லறம், கற்பு முதலியவற்றைக் கூறுவது.

<u>பட்டினப்பாலை</u>:- இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது; முந்நூற்றொரு அடிகளையுடையது அகவற்பா; வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தனது தலைவியைப் பிரிந்து வாரேன் என்று தனது நெஞ்சிற்குக் கூறுதலை விடயமாக வுடையது; காவிரிப்பூம் பட்டினம், சோழர் கரிகாற் பெருவளத்தான் வீரம், செங்கோல் முதலியவற்றைக் கூறுவது.

<u>மலைபடுகடாம்</u>:- இது பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது; ஐந்நூற்றெண்பத்து மூன்றடிகளையு டையது. அகவற்பா; பரிசில் பெறக் கருதிய கூத்தன் ஒருவனை பரிசில் பெற்றான் ஒருவன் பலவற்றைக் கோட்டத்தைச்

செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனிடத்து வழிப்படுத்தலை விஷயமாகவுடையது; அந்நன்னனது மலை, காடு, சோலை முதலியவற்றின் வளங்களையும் அவனது பெருமை, வள்ளன்மை, ஆற்றல், முதலியவற்றையும் கூறுவது.

நற்றிணை:- இது முதல் கூறப்படும் எட்டு நூல்களின் தொகுதியை "எட்டுத்தொகை" என்று கூறுவர். நற்றிணை கபிலர் முதலான நூற்றெழுபத்தைந்து புலவர்கள் பாடிய, நானூறு ஆசிரியப் பாக்களையுடையது; அகப்பொருட் பகுதிகளைத் தெளிவாகக் கூறுவது; இதனைத் தொகுப்பித்தான் பாண்டியன் மாறன் வழுதி; இக்காலத்து உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

குறுந்தொகை:- இது திப்புத் தோளார் முதலான இருநூற்றைவர் புலவர்கள் பாடிய நானூற்றிரண்டு குறிய ஆசிரியப் பாக்களையுடையது; அகப்பொருட் பகுதிகளை நன்கு விளக்குவது; இதனைத் தொகுத்தோன் பூரிக்கோ; இதன் முதல் முந்நூற்றெண்பத்திரண்டு செய்யுள்களுக்குப் பேராசிரியரும் மற்றை இருபது செய்யுள்களுக்கு நச்சினார்க்கினியரும் உரைகண்டனர். அவ்வுரை இதுகாறும் வெளிப்படவில்லை. இந்நூல் புத்துரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐங்குறுநூறு:- இஃது ஐந்நூறு ஆசிரியப்பாக்களையுடையது; இதன் முதல் நூறு செய்யுள்களைச் செய்தவர் ஓரம்போகியார்; இரண்டாம் நூறு செய்யுள்களைச் செய்தவர் அம்மூவனார்; மூன்றாம் நூறு செய்யுள்களைச் செய்தவர் கபிலர்; நான்காம் நூறு செய்யுள்களைச் செய்தவர் ஓதலாந்தையார்; ஐந்தாம்

நூறு செய்தவர் பேயனார்; இதனைத் தொகுத்தவர் கூடலூர்கிழார்; இஃது பழயவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது

பதிற்றுப்பத்து: இது சேரநாட்டு வேந்தர் பதின்மரைச் சிறந்த தமிழ்ப் புலவர் பதின்மர் பப்பத்துப் பாக்களாகப் பாடிய நூறு அகவற்பாக்களையுடையது. தமிழ் நாட்டு நிலைமை சேரரது வீரம், கொடை, அரசாட்சி முதலியவற்றைக் கூறுவது; முதற் பத்துப் பாக்களும் இறுதிப் பத்துப் பாக்களும் தவிர மற்றை எண்பது பாக்களும் பழைய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளன.

பரிபாடல்:- சிறந்த செந்தமிழ்ப் புலவர் சிலரால் பாடப் பெற்ற எழுபது பாடல்களையுடையது; திருமாலை எட்டுப் பாடல்களாலும், முருகக் கடவுளை ம் முப்பத்தொரு பாடல்களாலும், காடுகிழாளை ஒரு பாடலா வையை யாற்றை இருபத்தாறு பாடல்களாலும், மதுரையை நான்கு பாக்களாலும் குறிப்பது; பரிமேலழகரால் உரை செய்யப் பெற்றது. இது வரையில் கிடைத்த இருபத்து நான்கு பாடல்கள் உரையுடன் அச்சிடப் பட்டுள்ளன.

கலித்தொகை: இது நல்லந்துவனார் முதலிய ஐம் பெரும் புலவரால் பாடப்பெற்றது, நூற்றைம்பது கலிப் பாக்களை யுடையது; முறையே பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் அகத்திணை ஐந்தையும் மிக அழகாக உணர்த்துவது; நச்சினார்க்கினியரால் உரை செய்யப்பெற்றது; அவ்வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

அகநானூறு:- இது மாமூலனார் முதலிய புலவர் பலர் இயற்றிய நானூறு அகவற்பாக்களையுடையது;

இதனைத் தொகுத்தவர் மதுரை உருத்திர சன்மர்; அகமெனவும், அகப்பாட்டெனவும், நெடுந்தொகை யெனவும் வழங்குவர்; இஃது பழைய உரையுடன் அச்சாகிவருகிறது.

<u>புறநானூறு</u>:- இது முடிநாகராயர் முதலிய புலவர் பலர் இயற்றிய நானூறு அகவற் பாக்களையுடையது; புறப்பொருட் பகுதிகளை மிகத் தெளிவாக வுரைப்பது, புறமெனவும் புறப்பாட்டெனவும் வழங்குவது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>கல்லாடம்</u>:- இது கல்லாடனார் இயற்றியது; காப்புச் செய்யுள்கள் இரண்டு தவிர நூறு அகவற் பாக்களையுடையது; அகப்பொருட் பகுதிகளை மிகத் தெளிவாக உரைப்பது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>சிந்தாமணி</u>: இதனை இயற்றியவர் திருத்தக்கதேவர். இது முதற் கூறப்படும் ஐந்து நூல்களும் ஐம்பெருங் காப்பியம் எனப்படும். இது சீவக சரித்திரத்தை மிக அழகுபடக் கூறுவது; நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>சிலப்பதிகாரம்</u>:- இது முத்தமிழிலக்கியமான ஒரு காவியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள்; இது கோவலன் சரித்திரத்தை மிக அழகுபடக் கூறுவது; அடியார்க்கு நல்லார் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>மணிமேகலை</u>:- இது மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றியது; கோவலன் மகள் மணிமேகலை யென்பாள் துறவடைந்து தவம் புரிந்து புத்த தருமங்களைக் கேட்டதைப் பொருளாகவுடையது; அரும்பதவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>குண்டலகேசி</u>: இது ஜைனர்பால் மறைந்தொழிந்த நூல்களுள் ஒன்றுபோலும். பல உரையாசிரியர்களால் உரை மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இதன் செய்யுள்களிற் சில அச்சிடப்பட்டிருக்கின்றன.

<u>வளையாபதி</u>:- இதுவும் ஜைனர்பால் மறைந்தொழிந்த நூல்களுள் ஒன்றுபோலும். பல உரையாசிரியர்களால் உரை மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட இதன் செய்யுள்களிற் சில அச்சிடப்பட்டிருக்கின்றன.

<u>யசோதரகாவியம்</u>:- இது முதற் கூறப்படும் ஐந்து நூல்களும் ஐஞ்சிறு காவியம் எனப்படும். இது ஜைன முனிவர் ஒருவரால் பாடப்பெற்றது. இதன் மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

<u>சூளாமணி</u>: இந்நூலை இயற்றியவர் தோலாமொழித் தேவர். இது பயாபதி என்பவனைப் பற்றிய கதையைக் கூறும். இதன் மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

<u>உதயணகுமாரகாவியம்</u>:- இது இன்னும் அச்சிடப் படவில்லை. இதன் ஏட்டுப் பிரதிகள் ஜைனர் சிலரிடம் உண்டு.

<u>நாககுமாரகாவியம்</u>:- இதுவும் இன்னும் அச்சிடப் படவில்லை. இதன் ஏட்டுப் பிரதி ஜைனர் சிலரிடம் உண்டு.

<u>நீலகேசி</u>:- இதுவும் இன்னும் அச்சிடப்படவில்லை. இதன் ஏட்டுப் பிரதி ஜைனர் பலரிடம் உண்டு.

<u>இரகுவம்மிசம்</u>:- இது யாழ்ப்பாண நல்லூர் அரசகேசரி இயற்றியது; வடமொழி இரகுவம்மிசத்தை முதனூலாக வுடையது. இக்காவியத் தலைவர் இரகு புபதியும் அவன் வழித்தோன்றல்களும். இஃது இரகு

வம்மிசத்தினர் பலருடைய வரலாறுகளைக் கூறுவது; அச்சிடப்பட்டுள்ளது.

<u>நைடதம்</u>:- இது அதிவீரராம பாண்டியன் இயற்றியது; அழகிய விருத்தப் பாக்களால் அமைந்தது. இக்காவியத் தலைவன் நளன். இது நளனது சரித்திரத்தை இனிது கூறுவது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>தேவாரம்</u>:- இது திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகம் பதினாயிரமும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகம் ~~ஐம்பத்தேழாயிரமும்~~ நாற்பத்தொன்பதினாயிரமும், சுந்தர சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகம் முப்பத்தேழாயிரமும் கொண்டது; தமிழ் மறை நான்கில் ஒன்றுயது; தமிழுடனே சைவ மதத்தைக் கற்க விரும்புவோரும் சிவப்பேற்றை அடைய விரும்புவோரும் கொள்ளத் தக்கது; சிறந்தோர் இசைத் தமிழ் நூலாக எண்ணப்படுவது; சம்பந்தர் பதிகங்களில் முந்நூற்றெண்பத்து நான்கும், திருநாவுக்கரசர் பதிகங்களில் முந்நூற்றுப் பதினொன்றும், சுந்தரர் பதிகங்களில் நூறும் அச்சிடப் பெற்றுள்ளன.

<u>திருவாசகம்</u>:- இது மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது; ஐம்பத்தொரு திருப்பதிகங்களையுடையது; தமிழ் மறை நான்கில் ஒன்றுயது; தமிழுடனே சைவத்தைக் கற்க விரும்புவோரும் சிவப்பேற்றை அடைய விரும்புவோரும் கற்கத்தக்கது; அச்சிடப்பட்டுள்ளது.

<u>திருக்கோவை</u>:- இதுவும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது; உலக இன்ப வாயிலாக வீட்டின்பத்தை உணர்த்துவது "இயற்கை புணர்ச்சி" முதல் "பரத்தையிற் பிரிவு" ஈருக இருபத்தைந்து பகுதிகளையுடையது.

"நச்சினார்க்கினியர்" உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திருவிசைப்பா: இது திருமாளிகைத் தேவர் முதலிய நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச் செய்தது இருபத்தைந்து திருப்பதிகங்களையுடையது; சிறந்ததோர் இசைத் தமிழ் நூலாக எண்ணப்படுவது; அச்சிடப் பட்டுள்ளது.

திருப்பல்லாண்டு: இது சேந்தனார் அருளிச் செய்தது; பரமசிவனைப்பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவது; சிறந்ததோர் இசைத்தமிழ் நூலாக எண்ணப்படுவது; அச்சிடப்பட்டுள்ளது.

திருமந்திரம்:- இது திருமூல நாயனார் அருளிச் செய்தது; [illegible] ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு மூவாயிரம் பாக்களையுடையதாய்ச் சிறந்து விளங்கும் யோக ஞான நூல்; அரும் பதவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பதினொராந்திருமுறை:- இது சிவனடியார் பன்னிருவர் பாடிய திருமுகப்பாசுரம் முதல் திருவேகாதச மாலை ஈறான நாற்பது பிரபந்தங்களையுடையது; அச்சிடப்பட்டுள்ளது.

பெரியபுராணம்:- இது சேக்கிழார் நாயனார் இயற்றியது. திருத்தொண்டர் புராணமெனவும் வழங்குவது; சிவனடியார் பலரது சரித்திரங்களை ஓர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்தொன்பது திருவிருத்தங்களால் கூறுவது.

சரித்திரச் சுருக்கங்களுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>திருப்புகழ்</u>: இது முருகக் கடவுளது பக்தராகிய 'அருணகிரிநாதர்' அருளிச் செய்தது. அம் முருகக் கடவுளது திருப்புகழைக் கூறுவது; பதினாறாயிரம் பாக்களையுடையது. இதில் சில பாகம் அச்சிடப்பட்டுள்ளது.

<u>நாலாயிரப் பிரபந்தம்</u>: திருமால் அன்பில் ஆழ்ந்த தெய்வத் தன்மை எய்திய 'பொய்கையாழ்வார்' முதலிய பன்னிரண்டு ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய நாலாயிரம் பாக்களையுடையது. தமிழொடு வைஷ்ணவமதத்தைக் கற்க விரும்புவோரும், வீடு பேற்றை அடைய விரும்புவோரும் கற்கத் தக்கது; பிறமத நிந்தை செய்யாதது; தமிழ் மறைகளுள் ஒன்றாயது; அச்சிடப் பட்டுள்ளது.

<u>பெருந்தேவனார் பாரதம்</u>: இது 'பெருந்தேவனார்' இயற்றியது. இடையிடையே வசனங்களையுடைய வெண்பாக்களால் யாக்கப்பெற்றது. சிற்சில பாகம் அச்சிடப் பெற்றது. முழுவதும் ஏட்டுப் பிரதியிலுள்ளது.

<u>வில்லிபுத்தூரார் பாரதம்</u>: இது வில்லிபுத்தூரார் இயற்றியது; மொழிக் கதையில் சில பாகங்களை விருத்தக் கடவுள் வாழ்த்து முதலியவற்றோடு நாலாயிரத்து முந்நூற்றைம்பது விருத்தப் பாக்களால் செய்யப் பெற்றது. ஆதிபருவம் முதலாகச் சௌப்திக பருவம் ஈறாகக் கொண்டது; குருகுலத்து மக்களில் துரியோதனாதியர்க்கும் தருமாதியர்க்கும் நடந்த போர் முதலியவற்றை பெரும்பாகமாகக் கொண்டது. மூலம் தனித்தும், பல பருவங்கள் உரையோடும் அச்சிடப்பட்டுள்ளன.

பாரதம் பிற்பகுதி: இஃது அரங்கநாதக் கவிராயர் இயற்றியது; சௌப்திகப் பருவ முதல் சொர்க்க ரோகண பருவம் வரையிலுள்ளது; வில்லிபுத்தூரார் பாக்களைப் போன்ற இனிமையான பாக்களாலானது; அச்சிடப்பட்டுள்ளது.

நல்லாப்பிள்ளை பாரதம்:- இது நல்லாப்பிள்ளை என்ற புலவர் இயற்றியது. வில்லிபுத்தூரார் பாட்டுகளோடு அவர் விட்டுவிட்ட வடமொழிப் பாரதத்தைப் பாகங்களைப் பாடிச் சேர்க்கப்பெற்றது; பதினாயிரம் விருத்தப் பாக்களுக்கு மேற்கொண்டது, அச்சிடப்பட்டுள்ளது.

கம்பராமாயணம்:- இது கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கம்பர் இயற்றியது. வால்மீகி ராமாயணத்தை முதலாகக் கொண்டது; பால காண்டம், அயோத்தி காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற ஆறு காண்டங்களாகப் பகுப்பப்பட்டுப் பல்லாயிரம் விருத்தப் பாக்களால் இராமபிரான் கதையை மிக அழகாக கூறுவது; அச்சிடப்பட்டுள்ளது;

இராமாயணம் பிற்பகுதி:- இது ஒட்டக் கூத்தர் பாடியது; கம்பர் விடுத்துவிட்ட உத்தர காண்டத்தைக் கூறுவது; கம்பர் பாக்களைப் போன்ற இனிமையான விருத்தப் பாக்களால் அமைந்தது, அச்சிடப்பட்டுள்ளது.

திருவிளையாடற் புராணம்: இப்பெயரோடு விருத்தப் பாக்களில் வேம்பத்தூரார் ஒன்றும், பரஞ்சோதி முனிவர் ஒன்றும் இயற்றியுள்ளார். இரண்டும் ஆலவாய்க் கடவுளது திருவிளையாடல்களைக் கூறுவன; அச்சிடப்பட்டுள்ளன.

<u>கந்தபுராணம்</u>:- இது கச்சியப்ப சிவாசாரியார் இயற்றியது; வடமொழிக் கந்தபுராணத்தை முதனூலாக வுடையது; முருகக் கடவுளது சரித்திரத்தை யுரைத்தது; உற்பத்தி காண்டம் முதலிய ஆறு காண்டங்களையுடையது. பதினாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தப் பாக்களை யுடையது. அச்சிடப்பட்டுள்ளது.

<u>காஞ்சிப்புராணம்</u>:- இது ஆசிரியர் சிவஞான யோகிகள் இயற்றியது; வடமொழிக் காந்தத் துச்சனற் குமார சங்கிதையிலுள்ள காஞ்சி மான்மியத்தின் மொழி பெயர்ப்பு; சொற்சுவை பொருட்சுவை நிறைந்தது; இயற்கை நவிற்சியணி நிரம்பித் ததும்புவது; அகத்திணையும் புறத்திணையும் அமைப்படுத்தியுரைப்பது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>திருத்தணிகைப் புராணம்</u>:- இது கச்சியப்ப முனிவர் இயற்றியது. காந்தத் துச்சனற் குமார சங்கிதையின் பிற் பகுதியிலுள்ள தணிகை மான்மியத்தின் மொழிபெயர்ப்பு. அகத்திணையும் புறத்திணையும் அளக்கொளப் போதிப்பது; முருகக் கடவுள் அருள் விளையாடலை அழகுபெற வுரைப்பது; அச்சிடப்பட்டுள்ளது.

<u>பிரபுலிங்க லீலை</u>:- இந்நூலை இயற்றியவர் சிவப்பிரகாச முனிவர். இஃது அல்லம தேவன் கதையினைக் கூறுவது. இனிய விருத்தப்பாக்களால் அமைந்தது; நாவிற்கும், செவிக்கும், உளத்திற்கும் இன்பம் பயப்பது; சொல்லணி பொருளணி நிறைந்ததோர் நல்ல காவிய ரத்தினம்; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>கைவல்லியம்</u>:- இது தாண்டவராய சுவாமிகள் இயற்றியது. வேதாந்த நூல்களிலெல்லாம் சிறந்தது; தத்துவ விளக்கப் படலம், சந்தேகம் தெளிதற் படலம்

என்னும் இருபது படலங்களையுடையது; இனிய விருத்தப் பாக்களால் அமைந்தது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

வாசிட்டம்:- இதனை இயற்றியவர் வீரையாள வந்தார். இது வைராக்கியப் பிரகரணம் முதல் நான்கு பிரகரணங்களால் நிர்வாணம், பாச வைராக்கியம், ஈசுவர பக்தி, பிரமஞானம் என்பவற்றைக் கூறி அவற்றிற்கு எடுத்துக் காட்டிலக்கியமாகக் கதை பல சொல்லி விளக்குவது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஈசுவர கீதை:- இது சிவபெருமான் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு அருளிய வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு. இதனைத் தமிழில் மொழி பெயர்த்த விருத்தப் பாக்களால் பாடியவர் தத்துவராயர். இஃது அச்சிடப்பட்டுள்ளது.

பகவத்கீதை:- இது கண்ணபிரான் அருச்சுனனுக்கு அருளிச் செய்த வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு; இனிய விருத்தப்பாக்களால் அமைந்தது; இதனைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியவர் சிபட்டர்; அழகிய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பிரமகீதை:- இது முனிவர்களுக்குப் பிரமன் அருளிச் செய்த வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு. ஐதரேயம் முதலிய ஒன்பது உபநிடதங்களின் பொருளை உபதேசிப்பது; வடமொழிக் கீதையினும் மிக அழகாக அமைந்துள்ளது; இதனைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியவர் தத்துவராயர்.

பிரபோத சந்திரோதயம்: இது வேதாந்தப் பொருளை நாடக முறையில், பிரவர்த்தி எனவும் நிவர்த்தி எனவும் இரண்டு பாலாக வகுத்து மோகன், விவேகன்

முதலிய நாடக பாத்திரங்களால் ஞானத்தைப் போதிப்பது. சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது; அச்சிடப்பட்டுள்ளது.

ஒழிவிலொடுக்கம்:- இதை அருளிச் செய்தவர் கண்ணுடைய வள்ளலார். இது வேதாந்தம், சித்தாந்தம் இரண்டையும் தம்முள் மாறுபடாதவாறு அவ்விரண்டின் பொருளையும் ஒருப்படுத்துரைப்பது; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் நன்கு உபதேசிப்பது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

மெய்கண்ட சாத்திரம்: இது திருவுந்தி திருக்களிற்றுப் படி, சிவஞானபோதம், சிவஞானசித்தி, இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கு சித்தாந்த நூல்களையும் கொண்டது; தமிழின் இனிமையையும் சிறப்பையும் சிவஞானத்தின் உண்மையும் மேன்மையும் அனுபவிக்க விரும்புவோர் கற்கத்தக்கவை இப்பதினான்கும்.

## இலக்கணம்

இலக்கண வினாவிடை:- இது நல்லூர் ஆறுமுக நாவலர் செய்தது; எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் வினாவும் விடையுமாகப் போதிப்பது; பெரிய இலக்கணங்களைக் கற்று எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் அறிய மாட்டாதார் கற்கத்தக்கது; அச்சுப் பிரதி எங்கும் கிடைக்கும்.

<u>நன்னூல்</u>: இது பவணந்தி முனிவர் இயற்றியது; எழுத்தும் சொல்லும் உணர்த்துவது; இதனை நல்லிலக்கண மென்று இக்காலத்தில் பலர் கற்பிக்கின்றனர்; கற்றபடி சொல்லுகின்றனர். கற்கின்றனர். ஆனால் இது பல இடங்களில் தொல்காப்பியத்தோடு முரண்படுகின்றது; பல பல இலக்கணங்களை ஒன்று சேர்த்துச் சுருக்கச் சூத்திரிக்கப்பட்டுப் படிப்போருக்குத் தளர்ச்சியும் வெறுப்பும் உண்டாக்குவது. எழுத்தையும் சொல்லையும் பிழைபடவுணர்த்திக் கற்போர் வாழ்நாள்களைக் கவர்ந்து, பொருள் முதலியவற்றை போதிக்கும் பேரிலக்கணங்களை அவர் கையெடுக்காதவாறு செய்வது; தமிழ் மக்களால் கைவிடப்பட வேண்டுமென்று என் போன்றோர் கடவுளைப் பிரார்த்திக்குமாறு செய்யும் தன்மையையுடையது; பலவுரைகளுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>நேமிநாதம்</u>:- இது குண வீர பண்டிதர் இயற்றியது. தொன்னூற்றாறு இனிய வெண்பாக்களால் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மிகத் தெளிவாக விளக்குவது; பிறர் உதவியில்லாமலும் சிரமமில்லாமலும் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கற்க விரும்புவோர் கைக்கொள்ளத் தக்கது; அழகிய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

வீரசோழியம்:- இதனை இயற்றியவர் புத்தமித்திரர். இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தின் இலக்கணங்களையும் அழகாகக் கூறும் ஒரு சிறு நூல். ஒரு நூற்றுத் தொண்ணூற்றொரு இனிய கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது. இதிற் சொல்லப்பட்ட எழுத்திலக்கணங்களில் ஒன்றைத் தருக. 'ளகாரம் தன் முன் சில வல்லெழுத்து வருங்கால் டகரமாகவும், சில மெல்லெழுத்து வருங்கால் ணகரமாகவும் திரியும்' என்ற விதியொன்றே

இலக்கணக்கொத்து: இது சுவாமிநாத தேசிகர் இயற்றியது; தமிழ் சொல்லிலக்கண விதிகள் சிலவற்றைப் பெருகத் திரட்டி வடமொழி இலக்கண வழக்கொடு பொருந்திக் கூறுவது; அறிமுகவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிரமமில்லாமல் சிறிய கால அளவிற்குள் எழுத்து முதலிய ஐந்தின் இலக்கணங்களையும் கற்க விரும்புவோர் இதனைக் கொள்ளலாம். இஃது அழகிய பழைய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இலக்கண விளக்கம்:- "நூலும் உரையும் இயற்றிய ஆசிரியர் வைத்தியநாத தேசிகர். இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்றதிகாரங்களுடையது. இதில் எழுத்துச் சொற் பொருள் யாப்பணி யென்ற ஐந்திலக்கணங்களும் கூறப்படும். வைத்தியநாத தேசிகர் இந்நூலைப் பெரும்பான்மையால் தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்களைக் கொண்டும், சில பான்மையால் தண்டியலங்காரம், யாப்பருங்கலம், பாட்டியல் முதலியவற்றின் சூத்திரங்களைக் கொண்டும், தாமியற்றிய சூத்திரம் சில தலைப்பெய்தும் செய்தனர். இதனாலே இஃதோர் புது நூலாயினும் பழைய இலக்கண நூற்றிரட்டென்றே கோடற்பாற்று". இது குட்டித் தொல்காப்பியமென்று சொல்லும் சிறப்பு வாய்ந்தது; உரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கம்:- இதனை இயற்றியவர் நாற்கவிராச நம்பி. இஃது அகப்பொருளிலக்கணங்களைச் சுருக்கிக்கூறும் ஒரு நூல். அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து இயல்களையுடையது. அழகிய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

யாப்பருங்கலம்:- இதனை இயற்றியவர் அமிர்தசாகரர். இந்நூல் அழகிய சூத்திரங்களால் யாப்பிலக்கணத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் நன்கு விளக்குவது.

ஒப்புயர்வற்ற அழகியவுரையோடு பொருந்தியது இவ்வுரை அழிந்துபோன இலக்கண விலக்கியங்களிற் சிலவற்றின் செய்யுள்களை மேற்கோள்களாகக் கொண்டுள்ளது. இம் மேற்கோள்கள் முற்காலத் தமிழ் மக்கள் எவ்வளவு மேம்பட்ட தமிழறிவை யுடையவராயிருந்தன ரென்பதையும், எத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் நூல்களெல்லாம் அழிந்து போயின வென்பதையும், படிப்போர்க்குக் காட்டி கண்ணீரைக் கவரும் திறத்தது. இந்நூல் உரையுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

<u>யாப்பருங்கலக்காரிகை</u>:- இதனை இயற்றியவர் 'அமுத சாகரர்'. இது சில கட்டளைக் கலித்துறைப் பாக்களால் யாப்பிலக்கணத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்குவது; குணசாகரர் இயற்றிய மிக அழகிய உரையைக் கொண்டது; உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

தண்டியலங்காரம்:- இது 'தண்டி' யென்பவரால் இயற்றப் பெற்றது; அணி இலக்கணத்தை மிக இனிய சூத்திரங்களால் அழகுபடக் கூறுவது; பொருத்தமான உதாரணச் செய்யுள்களைக் கொண்ட உரையோடு பொருந்தியது; அச்சிடப்பட்டுள்ளது.

<u>மாறனலங்காரம்</u>:- இதனை இயற்றியவர், இக்காலம் ஆழ்வார் திருநகரி என வழங்கும் திருக்குருகையின் கண் தோன்றிய பெருமாள் கவிராயர். இஃது அணியிலக்கணத்தை விரிவாகவும் தெளிவாகவும் விளக்குவது;- அணியிலக்கண நூல்களுள் தலையாக நிற்கும் சிறப்பு வாய்ந்தது; அழகிய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

<u>தொல்காப்பியம்</u>:- இந்த அகத்தியனார் மாணாக்கர்களுள் முதல்வரும் தவசிரேஷ்டருமான தொல்காப்பியர் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த திரணதூமாக்கினியார் இயற்றியது; ஒவ்வொன்பது இயல்களைக் கொண்ட எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், என்னும் மூன்றதிகாரங்களால் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்ற ஐந்தையும் உணர்த்துவது. இக்காலத்து வழங்கும் முத்தமிழ் [illegible] இலக்கணங்களுக்கும் முதனூலாக நிற்பது; முற்காலத்து வழங்கிய அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கணத்திற்குச் சிறந்த வழி நூலாக விளங்குவது; இக்காலத்து வழங்கும் இலக்கணங்களையெல்லாம் இயற்றுவதற்கு இலக்கணமாயமைந்தது; முற்காலத்து வழங்கிய இலக்கியங்களின் இலக்கணங்களையெல்லாம் கொண்டு நிற்பது; இலக்கியங்களில் வள்ளுவர் முப்பால் ஒப்புயர்வற்று விளங்குவதுபோல இலக்கணங்களில் ஒப்புயர்வற்று விளங்குவது; இக்காலத்துப் பேரளவிற் கேட்கப்படுவதும் உரைமேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட ஒரு சில சூத்திர வளவிற் காணப்படுவதுமான அகத்தியத்தின் அகத்தியத்தை உணரவிடாமற் செய்வது; விருப்போடு கற்கவும் கேட்கவும் பாடஞ் செய்யவும் தகுதியான செந்தமிழ்ச் சூத்திரப்பாக்களையுடையது; உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த இளம்பூரண வடிகளாலும், பேராசிரியராலும், நச்சினார்க்கினியராலும் மூன்றதிகாரங்களுக்கும், கல்லாடரால் எழுத்ததிகாரம், சொல்லதிகாரங்களுக்கும், சேனாவரையரால் சொல்லதிகாரத்திற்கும் உரைகள் செய்யப் பெற்ற மாட்சியுடையது; கற்கக் கற்க அறிவும் இன்பமும் பயப்பது.

முதலிரண்டதிகாரங்களும் மூன்றாம் அதிகாரத்தில் சில இயல்களும் நச்சினார்க்கினியருரை யொடும் மூன்றாம் அதிகாரத்தில் மற்றைய இயல்கள் பேராசிரியர் உரை யொடும் அச்சிடப்பட்டுள்ளன; சொல்லதிகாரம் சேனாவரையருரையொடு அச்சிடப்பட்டுள்ளன; மற்ற அதிகாரங்களும் இளம்பூரண வடிகளுரையோடு அச்சிடப் படுகின்றன.

--:0:--

ஆனோ/8.11.